# பட்டினப் பாலையில் அறப்பண்புகள்

*முனைவர் ஜெ. ரேவதி*
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
கோ.வெங்கடசாமி நாயுடு கல்லூரி, கோவில்பட்டி

மலர்: 11

சிறப்பிதழ்: 1

மாதம்: ஏப்ரல்

வருடம்: 2024

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS1-April.7720

## முன்னுரை

பழங்காலத்திலிருந்து இன்று வரை அறமானது நிலைத்து நிற்கிறது. இவ்வறம் சமுதாய மக்கள் வாழ்வில் கடைபிடிக்க வேண்டிய அவசியமான பண்பாகும். எண்ணங்கள் நடத்தையின் வழிகாட்டியாகவும் காரணிகள் தூண்டுகோலாகவும் செயல்படுகிறது.

“மனித உணர்ச்சிகளையும், சிந்தனைகளையும் செல்லும் திசைகளில் சிதறிவிடாமல் ஒரு நிலைப்படுத்துதல் வேண்டும்”” (ந. நளினி, மனிதரும் மனமும் ப. 40) மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்கமுறைகளின் தொகுப்பும், அவற்றின் முழுநிறை வடிவமே அறம் எனப்படும். இவ்வறம் பற்றிய செய்திகளை இலக்கியம் தெளிவாகக் காட்டுகின்றது.

ஒரு நாட்டின் வளமும், செழிப்பும் அந்நாட்டை ஆளும் மன்னனின் அறத்தையும் சார்ந்து அமைகின்றது. “மன்னன் என்ற சொல்லுக்கு சில தகுதிகள் உண்டு அத்தகுதிகளை அனைத்து மக்களும் பெற்று வாழ வேண்டும்”” என்பது பாரதியின் எண்ணம்.

“மன்னன் உயர்த்தே மலர்தலை உலகம்ஃ உயிரெல்லாம் தாங்குமோர் உடம்பு மாயினான்””. மன்னன் நாட்டின் குடிகளை உயிராகவும், உடலாகவும் கொண்டு பாதுகாக்கிறான் (சிந்திகேசவராஜ், மனிதம், ப.24) பாரதி பாடிய பாடலுக்கேற்ப பட்டினப் பாலையை ஆண்ட மன்னன் தன் குடிகளை உயிராகவும, உடலாகவும் எண்ணி நல்லறம் கொண்டு செங்கோல் ஆட்சி செய்தான் என்பது “பட்டினப்பாலையில் அறப்பண்புகள்”” என்னும் தலைப்பில் கட்டுரையாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## அறம்-விளக்கம்

முன்னோர்கள் அறம் என்னும் சொல்லிற்குத் தந்துள்ள விளக்கத்தோடு எத்திக்ஸ் என்னும் ஆங்கிலச் சொல்லிற்கு தரப்படும் பொருள் விளக்கம் மிகவும் பொருந்துவதாக உள்ளது. நல்ல அல்லது தீய செயல்கள் மூலம் தானாக வெளிப்படும் மக்களுடைய நடத்தையைப் பற்றிய ஆய்வியல் கலையே “எத்திக்ஸ்”” என்பதாகும் (தமிழ் விக்கிப்பீடியா 2013).

நல்ல பண்பை உணர்த்துவதற்கும் நீதி வாழ்வாத் தன்மையைக் குறிப்பதற்கும் பயன்படும் சொல் அறம். இவ்வறம் மனிதக் குழு தனக்குள் உருவாக்கிக் கொள்ளும் உயர்ந்த நெறியாகும். வாழ்க்கை வாழ்வதற்காக வகுத்துக் கொண்ட நடத்தைகள் நற்பண்புகள் இவற்றின் ஒட்டுமொத்த தொகுப்பே அறமாகும். இவ்வகையில் நற்குணங்களையும், நடத்தையும் கொண்ட மன்னன் கரிகாலன் அறத்துடன் செங்கோல் ஆட்சி செய்தான் என்ற செய்தியும் மக்களும் அறப்பண்புகளைப் பெற்று வாழ்ந்தனர் என்ற செய்தியும் பட்டினப் பாலையில் இடம் பெற்றுள்ளது. அறத்திற்கு பல பொருள் உண்டு. "ஈதல் என்று ஔவையும்இன்சொல் இனிதே அறம் என்று இலக்கணமும், பொய்யாமையே அறம் என்று வள்ளுவரும் குறிப்படுகின்றனர்"" *(எஸ்ஸிர்சி. சிந்தனை விழுதுகள், ப. 154).*

ஈதல், இன்சொல், பொய்யாமையாகிய மூன்றும் பட்டினப்பாலையும் அறப்பண்புகளாக மன்னனிடம் மக்களிடமும் இடம் பெற்றுள்ளன என்பதைப் பற்றி இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.

### திருமாவளவனின் அறம்

அறமென்பது நல்ல பண்பையும், நீ திவழுவாத்தன்மையும் குறிப்பிடுகிறது. இவ்வகையில் பட்டினப்பாலையின் மன்னன் திருமாவளவன் தன்னுடைய இளமைப் பருவ ஆட்சியில் நல்ல பண்பையும் நீதி வழுவாத்தன்மையையும் பெற்றிருந்தான். கரிகாலனிடம் வழக்குரைக்க வந்த இரண்டு முதியவர்கள், மன்னின் இளமைப் பருவம் கண்டு தயக்கம் கொண்டதை குறிப்பால் உணர்ந்த மன்னன் தானும் முதியவன் போல் வேடமணிந்து நடுநிலையோடு நின்று அவ்வழக்கிற்குத் தீர்ப்பு வழங்கினான் என்பதை,

**"உரைமுடிவு காணான் இளமையோன் என்று நரைமுது மக்கள் உவப்ப நரைமுடித்துச்.." *(பழமொழி நானூறு-6)***

**"இளமை நாணி முதுமை எய்திஃஉரைமுடிவு காட்டிய உரவோன் மருக""**

***(மணிமேகலை, 107-108).***

**"முதியோர் ஃ அவைபுகு பொழுதில் தம் பகைமுரண் செலவும்"" *(புறம் 187-188)***

இப்பாடல்கள் மூலம் தெளிவாக அறிய முடிகிறது. அறப்பண்புடன் அரசாட்சி செய்வதற்கு இளமைப் பருவம் அவசியமல்ல என்பதையும் அறிவே மிகச் சிறந்தது என்பதையும் அறிய முடிகிறது.

"கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது"" என்பதற்கேற்ப உருவத்தைக் கொண்டு கணிக்காமல் அறிவையும், ஆற்றலையும் கொண்டு கணிப்பதே சிறந்தது. இவ்வகையில் திருமாவளவன் இளமைப் பருவத்திலேயே நீதிவழுவாத் தன்மையைப் பெற்றிருந்தான் என்பதை அறிய முடிகிறது.

### நாட்டை வளப்படுத்தியதில் அறம்

நாட்டின் வளமும் சிறப்பும் நாட்டை ஆளும் மன்னின் அறச் செயல்களைச் சார்ந்தது. நாட்டில் வாழும் மக்களும் அறப்பண்புகளைப் பெறந்திருந்தால் மட்டுமே நாட்டின் புகழ் ஓங்கும். இவ்வகையில் பேராற்றலையும் அறிவையும் பெற்றிருந்த மன்னன் தன் அறத்தன்மையால் நாட்டை வளப்படுத்தினான். நாட்டின் எல்லையை விரிவுப்படுத்துவற்காக காடுகளை அழித்து, குளம் வெட்டி நீர்த்தேக்கங்களை ஏற்படுத்தி கழனிகளையும், விளைநிலங்களையும் உருவாக்கினான்.

காவிரியாறு கடலோடு கலக்குமிடத்தில் துறைமுகத்தைக் கட்டினான். இத்துறைமுகத்தால் வாணிபமும் மேலோங்கியிருந்தது. அயல்நாட்டு வாணிபத்தை வளர்ப்பதற்காக மரக் கலங்களையும் காவல் மதில்களையும் அமைத்தான். மக்கள் குடியிருப்புக்கு ஏற்றாற்போல் நாட்டை மாற்றியமைத்தான் என்பதை,

**"காடு கொன்று நாடாக்கிஃ குளம் தொட்டு வளம்பெருக்கிப் பிறங்குநிலை மாடத்து உறந்தைப்போக்கி...""**

***(பட்டினப்பாலை 283-293)***

என்ற பாடல் அடிகள் மூலம் தெளிவாக உணரமுடிகிறது. மன்னன் தன் நாட்டு மக்களுக்காக பலவிதமான செயல்முறைகளை உருவாக்கி மக்களோடு அன்புடன் கூடிய செங்கோன்மையை அறத்துடன் நடத்தினான் என்பதையும் அறிய முடிகிறது.

எந்தவொரு நாட்டின் செல்வச் செழிப்பும் வளமும் மன்னின் அறச் செயல்களாலே மேலோங்கி நிற்கும் என்பதை அறிய முடிகிறது.

**புலவர்களைப் போற்றியதில் மன்னன் அறம்**

மனிதருடைய வாழ்வில் ஈகைத்திறன் மிகவும் அவசியமான பண்பாகும். பிறருக்குக் கொடுத்து உதவும் கொடைத் தன்மை பெற்று வாழும் ஒருவனே அறப்பண்பைப் பெற்றவளாகக் கருதப்படுகிறான். "கொடை என்பது உயிரும், உடம்பும், உறுப்பும் முதலிய எல்லாப் பொருள்களும் கொடுத்தல் என்பது பொருள்"" (ஆலாலசுந்தரச் செட்டியார், பண்டைத் தமிழரின் பெருமித வாழ்க்கை, ப.7) சங்க கால அரசர்கள் கொடை வள்ளல்களாக இருந்தனர். தம்மைப்பாடி வரும் புலவருக்கும் மற்றவருக்கும் பொன்னையும், பொருளையும் வாரிக் கொடுத்து மகிழ்ந்தனர். இவ்வகையான காவிரிப்பும்பட்டினத்தை ஆண்ட மன்னன் திருமாவளவன் தன் நாட்டின் பெருமையைப் "பட்டினப்பாலை"" என்ற பெயரில் பாடிய புலவர் கடியலூர் உருத்திரங்கண்ணானருக்கு பதினாறு நூறாயிரம் பொன்னை வழங்கிய வள்ளல் என்பதை

**"தழுவு செந்தமிழ்ப்பரிசில் வாணர்பொன்**
**பதினொடாறு நூறாயிரம் பெறப்**
**பண்டு பட்டினப்பாலை கொண்டதும்""**
***(கலிங்கத்துப் பரணி, 198)***

என்ற பாடல் மூலம் தெளிவாக அறிய முடிகிறது.

"பாடியதோர் வஞ்சி நெடும்பாட்டால் பதினாறு"" கோடிபொன் கொண்டதுநின் கொற்றமே"" (தமிழ் விடுதூது 193) ஒட்டக்கூத்தர் பாடிய பிள்ளைத் தமிழில்,

"அன்று கவிக்கு வியந்து நயந்து / தரும் பரிசிற் கொருபோ...." (பிள்ளைத் தமிழ்-41) இப்பாடலின் மூலம் பட்டினப்பாலை பரிசில் மண்டபம் என்ற சிறப்புப் பெயரைப் பட்டினப்பாலை பெற்றது என்பதைத் தெளிவாக அறிய முடிகிறது.

மன்னனின் அறப்பண்பாகிய கொடைச் சிறப்பால் புலவர்கள் பெற்ற இன்பமானது உலகம் முழுவதும் பரவி பல்வேறு புலவர்களால் பாடப்பட்ட பல்வேறு இலக்கியங்களில் பட்டினப்பாலை பற்றிய செய்தி இடம் பெற்றுள்ளது என்பதை அறிய முடிகிறது.

**கொடிகள் ஏற்றத்தில் அறம்**

ஒருநாட்டின் பெருமையை அந்நாட்டுக் கொடியை வைத்தே நிர்ணயிக்க முடியும். அவ்வகையில் காவிரிபும்பட்டினத்தில் மன்னன் ஏற்றிய கொடிகள் மன்னின் அறத்தையும், பெருமையையும் நிலை நாட்டுகின்றன. கோயில்களில் தெய்வங்களின் உருவத்தை ஒத்து வணங்கக் கூடிய உருவக் கொடிகளும், வீரர்களைத் தெய்வமாக வழிபடும் இடங்களில் வீரவணக்கக் கொடிகளும் துறைமுகத்தில் வந்து தங்கும் வணிகர்கள் விரும்பும் பலநாட்டுக் கொடிகளும் ஏற்றப்பட்டிருந்தது என்பதை,

**"மையறு சிறப்பின் தெய்வம் சேர்த்திய ஃ**
**மலரணி வாயில் பலர்தொழ கொடியும்**
**வருபுனல் தந்த வெண்மணல்**
**கான்யாற்(று)..."**

***(பட்டினப்பாலை 164-180)***

பாடல் அடிகள் மூலம் தெளிவாக அறியமுடிகிறது. திருமாவளவன் நடுநிலைமையோடு தெய்வம், வீரர்கள், அயல் நாட்டவர்களை மதித்தான் என்பதைக் காவிரி நாட்டில் ஏற்றப்பட்ட கொடிகளின் மூலம் தெளிவாக அறிய முடிகிறது.

கொடிச்சிறப்பைநாட்டின்பெருமையை மேலோங்கச்செய்கிறது. கொடிகளைஉருவாக்கிய முறையைக் கொண்டு மன்னனின் அறத்தன்மை வெளிப்படுகிறது.

### முடிவுரை

நாட்டிற்கு வளமும், செழிப்பும் நாட்டை ஆளும் மன்னின் செங்கோல் ஆட்சியையும், அறப்பண்பையும் சார்ந்து அமைகின்றன. இவ்வகையில் காவிரிபும்பட்டினத்தை ஆண்ட மன்னன் கரிகாலன் நாட்டையும், நாட்டு மக்களையும் செல்வச் செழிப்புடன் வழி நடத்தியதற்கு மன்னின் அறப்பண்புகளும், மக்களாகிய வணிகர், வேளாளரின் அறப்பண்புகளுமே காரணங்களாக அமைகின்றன என்பதைத் தெளிவாக அறிய முடிகிறது.

**"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்**
**என்பும் உரியர் பிறர்க்கு"" (குறள் 72)**

அன்பே வடிவமாக விளங்கும் சான்றோர்கள் தமக்கென வாழாது பிறர்க்குரியவராக விளங்கினர் என்பது வள்ளுவரின் கருத்தாகும்.

இக்கருத்திற்கேற்ப பட்டினப்பாலையில் உள்ள மன்னனும் மக்களும் தமக்கென வாழாமல் பிறர்க்காகவும் வாழந்து நடுநிலைமை தன்மையாகிய அறப்பண்புகளைக் கொண்டு வாழ்ந்தனர் என்பதைத் தெளிவாக அறிய முடிகிறது.

இன்றைய உலகில் வாழும் மக்களும் தங்களுடைய வாழ்நாளில் அறப்பண்புகளைப் பெற்று வாழ்ந்தால் வாழ்வும், குடும்பமும் சிறந்து விளங்கும். அறப்பண்பென்பது மனிதன் வாழ்வில் பின்பற்ற வேண்டிய பண்புகளில் மிக முக்கியமான பண்பாகும்.